செய்தி வெளியீடு எண்.205 நாள்.17.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தொகுதி வழி நடுத்துனர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் மகளிர் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் கடம்பத்தூர், மீஞ்சூர், கும்மிடிப்பூண்டி, சோழவரம் மற்றும் இராகி.பேட்டை ஆகிய வட்டாரங்களில் காலியாக உள்ள 12 தொகுதி வழி நடுத்துனர் பணிக்கு, கீழ்கண்ட தகுதியின் அடிப்படையில் எழுத்து தேர்வு மூலம் தேர்வு செய்யப்படவுள்ளது. தற்காலிகமாக தொகுதி வழி நடுத்துனர் பணிக்கு மேற்குறிப்பிட்ட வட்டாரங்களில் உள்ள ஊரக பகுதிகளை சார்ந்த கீழ்கண்ட தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தகுதி விவரம்:-**

குறைந்த பட்சம் +2 படித்திருக்க வேண்டும். பட்ட படிப்பு மற்றும் கணினியில் முன் அனுபவம் பெற்று இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சுய உதவிக் குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

வயது 21 முதல் 45 வரை.

சுய உதவிக் குழுவில் நிர்வாகியாக (Office Bearers) இருக்க வேண்டும்.

ஒதுக்கப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கு சென்று களப்பணி ஆற்ற வேண்டும்.

அலைப்பேசி வைத்திருக்க வேண்டும் / SMS அனுப்ப தெரிந்திருக்க வேண்டும்.

இரு சக்கர வாகனம் உரிமம் பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி தகுதிகள் உள்ள ஆர்வமுள்ள நபர்கள் வருகின்ற 20.04.2017 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட ஆட்சியரகம் முதல் தளத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் (TNSRLM) விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்பணி முற்றிலும் தற்காலிகமானது மேலும் ஊதியம் தினக் கூலி அடிப்படையில் வழங்கப்படும், மேலும் விபரங்களுக்கு திட்ட அலுவலர், மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் மாவட்டம் - 602001, போன்- 044 – 27664528 அவர்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~